விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

— வெள்ளி விழா ஆண்டு

மலர் 25 தை 21 ஜ. வ் 1 இதழ் 853
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4-2-84

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# "ஜே. ஆர். அழைத்தால் பார்த்தசாரதி வருவார்"

(சென்னை)

"ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அழைத்தால், மீண்டும் கொழும்புக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சிறப்புப் பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதி வருவார்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுச் சென்னையில் தெரிவித்தார்.

சர்வகட்சி மகாநாடு குறித்து டில்லியில் திரு. பார்த்தசாரதியுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுச் சென்னை திரும்பியபின்னர் நிருபர்களுடன் பேசினார். அப்போது இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

நாளை கொழும்புக்குத் தனது சகாவான திரு சம்பந்தத்துடன் திரும்பவுள்ள திரு. அமிர்தலிங்கம், ஏதோ ஒரு தீர்வு ஏற்படும்வரை சர்வகட்சி மகாநாட்டில் கலந்து கொள்வோம் என்று கூறினார்.

சர்வகட்சி மகாநாடு பயனுள்ள முடிவைத் தருமா? என்று நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு. "இப்போது எதுவுமே சொல்லமுடியாத நிலையில் இருக்கிறோம். பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்" என்றார்.

## லண்டனிலிருந்து நேற்று வந்து சேர்ந்தன

# மோசடியைத் தடுக்க புதுவகை 'பாஸ்போர்ட்'!

(கொழும்பு)

கடந்த சில காலமாக கடவுச் சிட்டுகளில் (பாஸ்போர்ட்) நடந்துவரும் மோசடிகளைத் தடுக்கும் நோக்கோடு, 'போலிகள்' எதனையும் அதே மாதிரித் தயாரிக்கமுடியாத விதத்தில், லண்டனில் அச்சாகியுள்ள முதல் தொகுதி லண்டனிலிருந்து விமானத்தில் நேற்று இங்கு வந்து சேர்ந்தது.

இப்போது வந்து சேர்ந்துள்ள கடவுச்சீட்டுகள் போலிகளாகத் தயாரிக்கப்படுவதைத் தடுப்பதுடன், பெரும் தட்டுப்பாட்டையும் ஓரளவு நிவர்த்தி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 20 ஆயிரம் கடவுச்சீட்டுகள் வந்து சேர்ந்துள்ளன.

போலியான கடவுச் சீட்டுகளைத் தயாரித்து, அதன் மூலம் பெரும் மோசடிகளை நிகழ்த்தி, பெரும் பணம் சம்பாதித்து வரும் சில நிறுவனங்கள் அம்பலத்துக்கு வந்ததுடன், அந்த நிறுவனங்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

இப்போது கடவுச் சீட்டுகள் போதியளவு இல்லாததால், கிடைக்கும் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்களைப் பரிசீலித்து அவற்றுக்கான கடவுச்சீட்டுகளை வழங்கமுடியாத நிலையில், குடிவரவு குடியகல்வுத்திணைக்களம் திணறிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில், நேற்று வந்து சேர்ந்துள்ள கடவுச்சீட்டுகள், தேவைகளை ஓரளவு சமாளிக்கும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

லண்டனில் கடவுச் சீட்டுக்களைத் தயாரித்துத்தரும் பணியை அரசு அங்குள்ள ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்திருந்தது.

இரண்டாவது தொகுதி கடவுச்சீட்டுகள் கப்பலில் அங்கிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## பெயர்களை அனுப்பவில்லை

[கொழும்பு]

வரும் திங்கட்கிழமை குழு நிலையில் கூடி ஆராயவுள்ள சர்வகட்சி மகாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள ஆறு பிரதிநிதிகளின் பெயரை அறிவிக்

8-ம் பக்கம் பார்க்க

## 6 இராணுவ வீரர்களும் பிணையில் அனுமதி

(இரா. உதயகுமார்)

திருகோணமலை பிரெட்ரிக் கோட்டையைச் சேர்ந்த ஆறு இராணுவ வீரர்களும் நேற்று மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

கடந்த வருடம் டிசம்பர் 25ம் திகதி பிரெட்ரிக் கோட்டையில் வைத்து ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளை கொலைசெய்தது, பிறிதொரு கான்ஸ்டபிளை கொலைசெய்ய முயற்சித்தது ஆகிய குற்றச்சாட்டின்பேரில் எச். என். விமலசேன, பி. எம். ஜெயரத்ன, வி. டி. ஜெயவீர, டபிள்யூ. என். எல். சந்திரசிறி வீரக்கோன், ஆர். எம். சுமதிபால, கே. வி. ஆரியரத்ன ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஆறு இராணுவ வீரர்களும் திருகோணமலை பிரெட்ரிக்கோட்டை இராணுவமுகாமைச் சேர்ந்த ரஜரட்ட அணியைச் சேர்ந்தவர்கள்.

சட்டமா அதிபரின் உத்தரவின் பிரகாரம் அரசதரப்பு சட்டத்தரணி சிறீஸ்கந்தராசா பிணைமனுவை சமர்ப்பித்து இவர்களைப் பிணையில் விடுதலைசெய்ய எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## செல்வமாணிக்கம் மீது துப்பாக்கிச்சூடு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கணக்காய்வாளர் அலுவலக அத்தியட்சகர் திரு. கே. செல்வமாணிக்கம் (45 வயது) துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பகல் ஒன்றரை மணியளவில் அலுவலகத்தில் அவர் இருந்தபோது, ஒரு நபர் அவரது அலுவலகத்துக்குள் நுழைந்து கடிதமொன்றைக் கொடுத்ததாகவும், கடிதத்தைப் பிரித்து படிக்க ஆரம்பித்தபோது, அந்த நபர் மிக நெருக்கமாக நின்று கைத் துப்பாக்கியால் ஒரு தடவை சுட்டுவிட்டு ஓடியதாகவும், பின்னர் வெளியே ஒரு சைக்கிளில் காத்திருந்த மற்றுமொருவருடன் சேர்ந்து இரு

(8-ம் பக்கம் பார்க்க)

## இனி நேரடியாக வழங்கப்படமாட்டாது!

[இ. கந்தசாமி]

கடவுச்சீட்டுகள் இனி எவருக்கும் நேரடியாக விநியோகிக்கப்படமாட்டாது என்றும், தபால்மூலமே அனுப்பி வைக்கப்படுமென்றும் அதிகாரி ஒருவர் கூறினார்.

கல்விக்கும், சுயதொழிலுக்கும் சுயீனத்துக்குமே கடவுச்சீட்டு வழங்குவதில் முதலிடம் வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கான பாஸ்போர்ட்டுகள் துரிதமாக விநியோகிக்கப்படும். தனியான ஒரு பிரிவு யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகிறது.

## இலங்கையில் மனித உரிமை மீறல்: ஜெனிவாவில் 6-ல் ஆராயப்படும்

ஜெனிவா, பெப். 3

இலங்கையில் கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற இனக் கலவரங்கள் தொடர்பான அறிக்கையை ஐ. நா. வின் செயலாளர் நாயகத்திடமிருந்து மனித உரிமைகள் கமிட்டி கோரியுள்ளது

மனித உரிமைகள் கமிட்டி எதிர்வரும் திங்கட்கிழமை ஜெனிவாவில் கூடி இலங்கை மனித உரிமைகள் மீறல்பற்றி ஆராயவுள்ளது.

இலங்கையில் கடந்த வருடம் ஜூலை மாதம் இடம்பெற்ற இனக்கலவரங்களையடுத்து கடந்த அக்டோபர் மாதம் கடைசியாகக்கூடிய ஐ. நா. உபகமிட்டி இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டமை பற்றிக் குறிப்பிட்டிருந்தமை தெரிந்ததே.

இலங்கை நிலைமைகள்பற்றி ஆராய்வதற்கென பிரதிநிதி ஒருவரை அனுப்பவேண்டும் எனவும் இக்கமிட்டி சிபாரிசு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது

இலங்கையில் கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற இனக்கலவரங்கள் தொடர்பான அறிக்கையையும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து மனித உரிமைகள் கமிட்டி கோரியிருந்தது.

[செ]

## வேலைநீக்கம்பெற்ற 13 தமிழ் ஆசிரியருக்கு மீண்டும் வேலை கிடைத்தது!

[யாழ்ப்பாணம்]

தவறான முறையில் இடமாற்றம் பெற்றுர்கள் என்று தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த 13 தமிழ் ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை கிடைத்துள்ளது.

ஒன்றரை வருடத்தின் முன் தவறான முறையில் இடமாற்றம் பெற்றுர்கள் என்ற புகாரின் பேரில் 13 தமிழ் ஆசிரியர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டனர்.

இதுசம்பந்தமாக நடந்த விசாரணையின் பின் திரும்பவும் அவர்களுக்கு வேலை கிடைத்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

[க]

06—02—84இல்

சிகாமணி

ரெக்ஸ்ரைல் சென்ரர்

திறப்பு விழா





யாழ்ப்பாணத்தின்
நவீன, பாரம்பரிய
ஆடைத் தேவைகளை
நிறைவு செய்ய

15, நவீன சந்தை
உள்புறத்தில்

6—2—84

திங்கள் பகல்
11மணி — 12மணி
வரையுள்ள நல்வேளையில்

சிகாமணி

ரெக்ஸ்ரைல் சென்ரர்

ஆரம்பமாகின்றது

தங்கள் நல்வரவை நாடும்
திருமதி ச. தேவசிகாமணி

588

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லூர் கல்விக் கந்தோருக்கு அருகாமையில் சகல வசதிகளடங்கிய புதிய வீட்டுடன் இரண்டுபரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு, 81, செல்லர் ரோட், நல்லூர். பி. ப. 4-00 மணிக்குப் பின் நேரில் சந்திக்கலாம். 608

தெல்லிப்பழைச் சந்திக்கும், துர்க்கையம்மன் கோவிலடிக்கும் இடையில் பானைக்குட்டி ஒழுங்கையில் 11 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு முருகர் செல்லக்குட்டி, கீரிமலை ரோட், மாவிட்டபுரம். 592

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், யூனியன் கல்லூரிக்கு மையமாகவும் சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு அருகாமையில் மின்சார வசதியுடன் வீடு கட்டுவதற்கு உகந்த காணி 3—4 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. பரமநாதன், கீரிமலை வீதி, மாவிட்டபுரம். 597

Three Acrefarm நாள் Broilers 8/50 பேட்டுக்குஞ்சு 7/20 கொம்பனி ரசீதுடன் வந்துள்ளது. அரியரத்தினம், மாக்கட் கேட், (பேக்கரி முன்னல்) கொக்குவில். 554

புதிய Stereo Cassette Tuner Amplifier (Model-J-3, Hitachi) உடன் புதிய Electro - 35 (Yashica) Camera ஒன்றும் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு தி. கிருஷ்ணகுமார், ''வளர்மதி'' பொற்பதிரோட், கோண்டாவில்கிழக்கு. 574

ஜப்பானிலிருந்து மறுசீரமைக்கப்பட்டு இறக்குமதிசெய்யப்பட்ட ரோசா 6 சிலிண்டர் மினிபஸ் என்ஜின் கியர்பொக்சுடன் விற்பனைக்குண்டு. அத்துடன் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள் C70-C90, CD 125, CX 500 விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். ஆர். கே அன்சன்ஸ், 129, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். T. P. No. 24029. (478)

காரைநகர் வேம்படியில் பிரதான வீதி, பாடசாலை கடைகள், பஸ்தரிப்பு என்பவற்றிற்கு மிக அண்மையில் 8½ பரப்பு காணி விற்பனைக்குண்டு பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: திருமதி தனலட்சுமி ஆறுமுக வைத்தியசாலை ஆனைக்கோட்டை. 551

முத்திரைச்சந்தியில் நல்ல வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ''விஜி ஸ்ரோர்ஸ்'' (மொத்த சில்லறை வியாபாரத்திற்கும், மிளகாய், நெல், உழுந்து வெண்காயம் கொள்முதல் செய்வதற்கும்) ஏற்ற நல்ல கட்டிடம்கொண்ட கடையும் மூன்று ஏக்கர் தென்னந் தோட்டமும் விற்பனைக்கு உண்டு. மேலதிக விபரத்திற்கு பொ. விஜயரத்தினம், I S T I கிளிநொச்சி. 470

சுமார் 80தொன் கண்ணும்புக்கல் (Coral Stone) விற்பனைக்குண்டு, வாங்க விரும்புவோர் 3-4, தொழிற்பேட்டை Industrial Estate) அச்சுவேலி உடன் தொடர்பு கொள்ளவும். 547

### WANTED

Male Accounts Clerk knowledge of Income Tax work. Give Qualification, Experience and Salary expected. Preperence within Jaffna Municipality, Advt. No. 546 C/o Eelanadu, Jaffna. 546

## விற்பனைக்கு

சுன்னாகம் சஸ்னரி இரும்புக் கடையில் கட்டிடத்துக்குத் தேவையான இரும்புச்சாமான்கள். பெயின்ற் வகைகளுடன் குடும்பத்தலைவிகளுக்கு தேவையான ஆட்டுக்கல், அம்மி, திருகை, கோவில் தளவரிசைக்கல் அனைத்தும் விற்பனைக்குண்டு. வவுனியா, சூரியா ஸ்ரோர்ஸின் கைதேர்ந்த தொழில் நுட்பக்கலைஞர்களினால் கடைந்து தயாரிக்கப்படுகிறது. 142

யாழ்ப்பாணம் கண்டுக்குளியில் கச்சேரி பாடசாலைகளுக்கு அண்மையில் நம்பர்: 11 செல்ற் லேன்ஸ் ஒழுங்கையில் இருக்கும் மூன்று பரப்பு நாலு குளி வீடுகட்டுவதற்கு உகந்த காணி விற்பனைக்குண்டு. சபாரெத்தினம் 40, றக்கா ஒழுங்கை, சுண்டுக்குளி 447

## தேவை

எங்களுடைய ஸ்தாபனத்திற்கு புரொயிலர் கோழி விநியோகம் செய்ய விரும்புவோர் தயவு செய்து முகாமையாளரைத் தொடர்பு கொள்ளவும்! யாழ் சைனீஸ் றெஸ்ரோரன்ஸ் 124, ஆர். ஆர். நல்லையாவீதி முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 591

பட்டு நெசவு வேலை செய்வதற்கு பெண்கள் தேவை விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். வசந்தபுரம் சில்க்ஸ், 75/11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 491

யாழ். நகரில் உள்ள பிரபல நிறுவனத்தில் கடமையாற்ற Hotel Management பயிற்சி பெற்ற ஒருவர் தேவை வேதனம் ரூபா 1000/- சொந்தக் கையெழுத்தில் 9-2-84க்கு முன்பாக விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 575 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (575)

எமதுஸ்தாபனத்திற்கு பெருமளவில் நன்றாகக் காய்ந்த கொப்பருத்தேவை. நாம்பெருமளவில் கொள்வனவு செய்யவுள்ளோம் நல்லரக நம்பர்-1 (முதலாம் நம்பர்) கொப்பருவிற்கு நல்ல விலை போட்டு எடுப்போம். ந. கந்தையா செட்டியார், சி. எஸ். கே. ஸ்தாபனம் 133, கே.கே எஸ் ரோட், யாழ்ப்பாணம் 391

## வாடகைக்கு

கீரிமலையிலிருந்து 500 யார் தூரம் இளவாலை வீதி, மெயின் ரோட்டில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: அகஸ்தியர், உயரப்புலம், ஆனைக்கோட்டை. 599

## பிழை திருத்தம்

யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

பதனிடும் ஆலை இயந்திர இயக்குநர் பதவி

### விளம்பரம்

3-2-84 திகதி ஈழநாடு பத்திரிகையின் 2ம் பக்க 579ம் இலக்க விளம்பரத்தில் யோ. சந்திரபிள்ளை என்ற பெயர் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்

## சேவை

எமது ஸ்ரூடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இலவசமாக வழங்கப்படும். Processing ரூபா 30/- P. C. Printing ரூபா 6/50 கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம் 502

## மானிப்பாய் கோவில் பற்று ப.நோ.கூ. சங்கம் கேள்வி கோரல்

மேற்படி சங்க வாணிசாலையில் பாவிக்கப்பட்ட தளபாடச் சாமான்களுக்கும், உபகரணங்களுக்குமான கூறுவிலை கோரப்படுகிறது. பொருட்களை சங்க காரியாலய நேரத்தில் பார்வையிடலாம். கூறுவிலைகள் அரக்கு முத்திரையிடப்பட்டு, பதிவுத் தபால்மூலம் 10-2-84ன் முன்னர் பொது முகாமையாளர், மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
மானிப்பாய் கோவில்பற்று
ப. நோ. கூ. சங்கம். 593

### NOTICE

Sealed quotations for the supply of Pre-school items for the use of Nursary Classes will be received by me till 10 00 a. m. on Wednesday, 15th February, 1984. The items include single desks and chairs made of steel pipes and wood.

For list of items and further particulars, please contact me on any week-day between 10.00 a. m. and 1.00 p. m.

General Manager.
Kaddaively-Nelliady
M P C S. Ltd,
Karaveddi,
31st January. 1984. 584

## ஊழியர் தேவை

கஸ்தூரியார் வீதியிலுள்ள வியாபார ஸ்தாபனத்திற்கு தகுதி வாய்ந்த பெண் பொறுப்பாளர் தேவை.

கணிதம், ஆங்கில அறிவு இருத்தல் வேண்டும்.

தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 583
C/o ஈழநாடு லிமிட்,
யாழ்ப்பாணம். 583

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## முக்கிய அறிவித்தல்- மின் விநியோகம்

1984ம் ஆண்டு மாசி மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4-00 மணி வரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு அநுராதபுரம் - யாழ்ப்பாணம் 132 கே. வி. மின் மார்க்கம் தடைசெய்யப்படவிருப்பதால், கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு, கண்ணுகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணைபோன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி, யாழ் பிரதேசங்களின் பெரும்பாலான பகுதிகளில், மின்சார விநியோகம் தடைப்படும் என அறியத்தருகிறேன். 84-01-30.

மின்பொறியியலாளர்,
யாழ் பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை.
515 சுன்னாகம்,

## திருவடி நீழல் தையல் நிலையம்

இலக்கம் 3 விபுலானந்தர் வீதி கொழும்புத்துறையில் பின்வரும் பயிற்சி வகுப்புகள் 3-2-84ல் ஆரம்பமாக உள்ளன

1. Scientific cutting
2. Applique work and wall hangings
3. Flower making
4. Macrames making
5. Embroidery

இவற்றை பழகவிரும்புவோர் 3ம் திகதி 2-30 மணிக்கு மேற்படி நிலையத்தில் சமூகமளிக்கவும். நியாயமான விலையில் தையல் ஓடர்களும் ஏற்கப்படும். 548

## தேவை

சோடாப்பெட்டி ஏற்றி இறக்கி வேலை செய்யக்கூடிய கூலியாட்களும் லொறி கிளீனரும் தேவை
மற்றும் டீசல் வாகனம் வேலை செய்யக்கூடிய 5 வருடத்திற்கு மேல் நன்கு அனுபவம் உள்ள மெக்கானிக்குகளும் தேவை.
திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
நேரில் வரவும்.

உரிமையாளர்,
பிள்ளையார் ஸ்ரோஸ்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (590)

## நன்றி நவிலல்

### விமலேசன் - வசந்தி

எமது திருமண வைபவத்திலும் வரவேற்பு உபசாரத்திலும்கலந்து கொண்டு எம்மை ஆசிர்வதித்தவர்களுக்கும், அன்பளிப்பு வழங்கியவர்களுக்கும், வாழ்த்துகள் அனுப்பியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தனித்தனி நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

53 சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.
அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு
600

## நல்வாழ்வு தேடிச்செல்லும் முயற்சி

மனித வரலாறு, நீதியான சமுதாயத்தைக்கொண்ட மிக நல்லதொரு வாழ்க்கையமைப்பைத் தொடர்ந்து தேடிச் செல்லும் முயற்சியாகும். அத்தகைய சமூக அமைப்பை எழுப்புவதற்கு மார்க்ஸிஸ - லெனினிஸக் கோட்பாடு அடித்தளமாக அமைந்திருக்கிறது. அது மட்டுமன்றி, நுட்பமானதும், சிரமமானதுமான அரசியல் பாதையில் சென்று நீதியான சமூக அமைப்பை உருவாக்க, பொதுமக்களுக்கும் புரட்சி இயக்கத்திற்கும் வழிகாட்டுகின்றது. இவ்வறிவிப்பைப் பெற்றுப் பயனடைவதற்கு, நம் நாட்டின் புரட்சி இயக்கத்தின் முதுபெரும் அனுபவமிக்க அங்கத்தவரும், வழக்கறிஞருமான த. துரைசிங்கம் எழுதிய ''லெனினும் ஆசியாவும்'' என்ற நூலைப் படியுங்கள்.

இந்நூல் புத்தகசாலைகளில் கிடைக்கும்.
விலை ரூபா 10/-

சோஷலிஸ ஆய்வுக் கழகம்,
31, விக்சன் வீதி, கொழும்பு - 12. (513)

Personal Classes for

# GCE (A/L) 1985 PURE / APPLIED

சனி, ஞாயிறு வகுப்பு நாளை ஆரம்பம்: (5-2-84)

| | | | |
|---|---|---|---|
| பிரிவு I: | 7-00: காவிகள்<br>8-30: தொடர்கள் | பிரிவு: II | 10-15: தொடர்பு வேகம்<br>11-45: திரிகோண கணிதம் |

புதிய முகவரி:
74, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி-பெருமாள்கோவில் இடையில்)

TUTOR:
**RAVIMOHAN**

(519)

# அஸாமில் சட்டவிரோத குடியேற்றக்காரரை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## இந்திய மத்திய அரசு அறிவிப்பு

கௌகாத்தி பெப். 3

அஸாமில் சட்டவிரோதமாகக் குடியேறியிருக்கும் வெளிநாட்டவர்களைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அஸாம் மாநிலத்திற்கு இன்று விஜயம் செய்கிறார். இவர் அங்கு அஸாமின் புதிய தலைநகருக்கான அடிக்கல்லை நாட்டி வைப்பார்.

1971 ம் ஆண்டிலிருந்து பங்களாதேஷிலிருந்து வந்தமக்கள் சட்டவிரோதமாக அஸாமில் குடியேறியுள்ளனர்.

இந்திய மத்திய அரசினால் நியமிக்கப்படும் விசாரணை மன்றங்கள் சட்டவிரோதமாக ஒருவர் குடியேறினார் என்று தீர்மானிக்கும் பட்சத்தில், அவருக்கு அஸாம் மாநிலத்திலிருந்து வெளியேற 30 நாள் அவகாசம் வழங்கப்படும்.

வெளிநாட்டவர்களுக்கு எதிராக அஸாமில் இடம்பெற்று வரும் கிளர்ச்சிகளினால் இதுவரை சுமார் 3,000 பேர் கொல்லப்பட்டதாகவும், 3 லட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் இந்திராகாந்தியின் விஜயத்தையடுத்து, அஸாமில் 36 மணித்தியால சாலை மறியல் போராட்டத்தை இன்று நடத்தப்போவதாக கிளர்ச்சிக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

இதன் காரணமாக அஸாம் அரசு அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியுள்ளது. (வெ)

### அமெரிக்காவில் இந்திய விழா

புதுடில்லி, ஜன 2

அடுத்த ஆண்டு ஜூனில் 'இந்திய விழா'வொன்று அமெரிக்காவில் நடத்தப்படவுள்ளது. இந்தியாவின் கலை, கலாச்சாரப் பெருமைகளை விளக்கும் வகையிலேயே இந்த விழா ஏற்பாடாகியுள்ளது.

நேற்று இதுபற்றி புதுடில்லியில் ஆராயப்பட்டது. இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் இவ்விழா சிறப்புற வாழ்த்தினார்

அண்மையில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி திரு ஜோன் எவ் கெனடியின் பாரியார் திருமதி ஜாக்குலின் ஒனஸிஸ் இந்தியா வந்திருந்தார். இவர் தமது இந்திய அனுபவங்கள் பற்றி 'இந்திய விழா'வின் போது நூல் ஒன்றை வெளியிடுவார் என்றும் கூறப்பட்டது. (கி)

சரித்திர காலத்திற்கு முற்பட்ட

# குகை ஓவியங்கள்

## மதுரையில் கண்டுபிடிப்பு

சென்னை, பெப். 3

மதுரையில் சரித்திர காலத்திற்கு முற்பட்ட குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக பேராசிரியர் விஜயவேணுகோபால் இந்த ஓவியங்களைக் கண்டுபிடித்துள்ளார்

இந்தக்குகை ஓவியங்கள் 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்றும் கூறப்பட்டது. தென் தமிழ்நாட்டில் சரித்திர காலத்திற்கு முற்பட்ட சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். (வெ)

### மாணவர் பிரிவு செயலாளராகத் தெரிவு

சென்னை பெப். 3

அ. தி. மு. க வின் மாணவர் பிரிவு செயலாளராக தமிழ்நாடு விவசாயத்துறை அமைச்சர் திரு. கே. காளிமுத்து தெரிவு செய்யப்பட்டுள்ளார். (வெ)

### மாணவர்க்கு சிரமம்

[கோண்டாவில்]

யாழ் பல்கலைக்கழகம், பல்தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றிற்கு அருகில் இருக்கும் கலட்டிச் சந்தியில் உள்ள தபால் பெட்டி நீக்கப்பட்டு, ஐந்து மாதங்களுக்கு மேலாகியும் மீண்டும் பொருத்தப்படாமையால் மாணவர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர். (கு)


**HOTEL GNANAMS**

Situated in the Heart of City
CLEAN COMFORTABLE ROOMS
WITH — A/C or NON A/C
FOR
Honey Mooners
AND
Holiday Lovers
where a feeling of informality prevails.
Also,
மேல் நாட்டு உள்நாட்டு உணவுகள், விசாலமான மண்டப வசதிகள் இவை அனைத்தையும் அமைதியான சூழ்நிலையில் வழங்குவது
ஹோட்டல் ஞானம்ஸ்
For more information Contact:
Manager
Hotel Gnanams
Telephone: 22082


"வட்டமேசை மகாநாட்டு முடிவுகள்

# இலங்கைத்தமிழர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வாக அமைய வேண்டும்"

## பன்ருட்டி ராமச்சந்திரன் கூறுகிறார்

சென்னை பெப். 3

"இலங்கையின் இனப் பிரச்னைக்குத் தீர்வு காணு முகமாக கொழும்பில் கூட்டப்பட்டுள்ள வட்டமேசை மகாநாட்டின் முடிவுகள் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வாக அமைவதுடன், நீடித்து நிலைக்கக்கூடியதாகவும், இருக்க வேண்டும்."

இவ்வாறு தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சர் திரு. பன்ருட்டி ராமச்சந்திரன் சென்னையில் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்!

"இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணு முகமாக முன்பு ஏற்பட்ட பல உடன்படிக்கைகள் செயற்படுத்தப்படவில்லை" என்று கூறினார்.

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக திரு பன்ருட்டி ராமச்சந்திரன் ஐக்கிய நாடுகள் சபையிலும் உரையாற்றியிருந்தது தெரிந்ததே. (வெ)

"வளரும் நாடுகளின் பொருளாதார நெருக்கடி

# உலகில் அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளது"

## 'அங்டாட்'செயலாளர்நாயகம் கூறுகிறார்

சென்னை. பெப். 3

"வளரும் நாடுகளின் பொருளாதார நெருக்கடி உலகில் அரசியல் பதட்டத்தையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தியுள்ளது".

இவ்வாறு 'அங்டாட்'டின் செயலாளர் நாயகம் டாக்டர் காமினி கொரியா ஜெனிவாவில் நடைபெற்ற வளர்முக நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார் அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:-

"செல்வந்த நாடுகள் பயனுள்ள பொருளாதார உதவிகளை வளரும் நாடுகளுக்கு வழங்கவேண்டும்" என்று கூறினார். (வெ)

### தஞ்சைப் பல்கலைக்கழக புலமைப் பரிசில்

[யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்துக்கலை வளர்ச்சியையும் தமிழ் நாட்டுக்கலைவளர்ச்சியையும் ஒப்பு நோக்கி ஆராய்வதற்கான தஞ்சைப் பல்கலைக்கழக புலமைப் பரிசில் நியமனம் த. சண்முக சுந்தரத்துக்குக் கிடைத்துள்ளது

த. சண்முகசுந்தரம் யாழ்ப்பாணக்கலைவளர்ச்சி பற்றிய பல ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளார் மகாஜனாக் கல்லூரி அதிபரான இவர் இருமுறை தமது நூல்களுக்குச் சாகித்திய மண்டலப் பரிசும் பெற்றுள்ளார்.

ஆராய்ச்சி கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் உதவியாக இருந்து ஆவன செய்து வருகிறார் த. சண்முகசுந்தரம் வெளிக்கள ஆய்வுகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டுள்ளார்.

### ஜூலை கலவரம்: அரசின் உதவித்தொகை

(யாழ்ப்பாணம்)

ஜூலைகலவரத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்துள்ளவர்களில், 600 ரூபாவிற்குக் குறைவாக வருமானம் பெறுவோருக்கு அரசினால் உதவி (... ம் பக்கம் பார்க்க)

# கோப்பாயிலிருந்து 33 பேர் தொழில்பயிலுனராக தெரிவு

(கல்வியங்காடு)

தேசிய தொழிற்பயிற்சிசபை 1984ம் ஆண்டுக்கான தொழில் பயிலுநர்களை தனியார் நிறுவனங்களிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் பயிற்றுவிப்பதற்கான தெரிவுகளில் ஈடுபட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கோப்பாய் தொகுதியில் இவ்வித பயிலுநர்களைத் தெரிவு செய்யும் முயற்சியில் தேசிய தொழிற்சபையின் வடபிராந்திய அத்தியட்சகர் திரு. வ.செ. ஜெயகுமார் ஈடுபட்டுள்ளார்.

இத்தொகுதியில் இருந்து விண்ணப்பித்தவர்களில் தகுதியான 33 பேர்களுக்கு இந்நியமனம் இம்மாத இறுதியுள் வழங்கப்படுமென அவர் தெரிவித்தார்.

பயிலுநர்களுக்கான பயிற்சி பெறுபவர்களுக்கு உரிய 1 வருட காலத்துக்கு 300 ரூபா அலவன்ஸாக வழங்கப்படும்

கோப்பாய் முன்னாள் எம். பி. திரு மு ஆலாலசுந்தரத்தின் சிபார்சுக்கமையவே இந்நியமனங்கள் செய்யப்படுகின்றன. [கு]


**ஹோம் பிரின்ஸ் லிமிட்.**

உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு

கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிரின்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24810
2. நியூ ப்ரசீதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22480
3. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22537, 22370
4. நியூ லங்கா அலுமீனியம் இன்டஸ்றீஸ் விற்பனவு நிலையம்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிரின்ஸ் லிமிட்.
468, காலி வீதி, கொழும்பு-6
தொலைபேசி: 589190—587680

2. ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
157/3, ஸ்ரீ கதிரேசன்வீதி, கொழும்பு-11.
தொலைபேசி: 26277

### மணிவாக்கு

அறியாமை நம்பிக்கை, உயிரற்ற அமைதியை விட்டு, எண்ணம், துணிவு, செயலென்ற புயல் காற்று, அமளி, சண்டமாருதம் இவைகளையே நான் விரும்புகின்றேன்.

— இங்கர்சால்

## நமது நோக்கு

# சுய பரிசோதனைக்கு தகுந்த தினம்

நாம் செய்த தவறுகளுக்காக வருந்தி பிராயசித்தம் செய்யவேண்டிய தினம் ஒன்று உண்டானால் அது இன்றைய தினமென்பதில் எவ்வித ஆட்சேபமும் இருக்காது.

நாம் என்று இங்கு குறிப்பிடுவது தமிழ் மக்கள் மட்டுமல்ல; நாட்டு மக்கள் அனைவரையுமே.

களுத்துறையில் இன்று இடம்பெறும் 36-வது சுதந்திர தினக் கொண்டாட்டம் தமிழ் மக்களுக்கு மட்டும் தான் அர்த்தமற்றதல்ல.

இன்று நாடு சீர்கெட்டுப் போகும் நிலையில் மக்கள் அனைவருக்கும் ஒரு பிராயசித்த தினமாகும்.

நாட்டின் ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஆடிக்கலவரத்தைக் குறிப்பிட்டபோது அதனால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சிங்கள மக்களே என்றார்.

இஸ்லாமிய மக்கள் தப்பிவிட்டனர் என்று கருதப்படவில்லை.

தமிழரின் பதிமுதலில் முக்கியமானது உயிர் என்றால், அவர்களின் உடைமை, பல சிங்கள ஊழியர்களைப் பாதித்திருந்தது கண்கூடு. நாடனைத்துக்கும் பேரழிவு உண்டானது இன்று பிரத்தியட்சம்; இதுபோன்ற இன்னொரு கலவரம் மறுதலிக்குமானால், எந்த ஒரு நாடோ நிறுவனமோ இலங்கை விடயத்தில் 'எச்சிக்கையால் காகம் துரத்த' முன்வரமாட்டாதென்று நிதியமைச்சரும், ஜனாதிபதியும் மிகத் தெளிவாக எச்சரிக்கை செய்துள்ளனர்.

இவ்வித பேரழிவு நடைபெற்று ஆறு மாதம் முடிவடைந்ததும் நாமும் நாடும் நடத்தவேண்டிய வைபவம் சுய பரிசோதனையும் பிராயசித்தமுமாகும்.

அதனைத் தட்டிக்கழித்து எமது நாட்டில் எவ்வித அசம்பாவிதமும் நடந்ததில்லை; நாம் அசுரவேகத்தில் முன்னேறிக் கொண்டு போகின்றோம்; உணவு உற்பத்தியில் மிதமிஞ்சிய அரிசியை என்ன செய்வதென்று தெரியாது திண்டாடுகின்றோம்; மனித உரிமைகள் பேணப்படும் நாடுகளில் இலங்கை தலைநிமிர்ந்து நிற்கின்றது; இந்த நாட்டைத் தரிசிக்க அள்ளுப்படும் உல்லாசப் பயணிகளுக்கு இன்னுமொரு வானளாவிய ஹோட்டல் கொழும்பு மாநகரில் எழுகின்றது; இவ்வித பிரசாரம் வேறு; நாம் குறிப்பிடும் பிராயச்சித்தம் வேறு.

நாம் எதனைக் குறிப்பிடுகின்றோம்? எங்கள் சுதந்திரம் எவ்வித கஷ்டமுமின்றி கைகெட்டிய பண்டம்; இந்திய சுதந்திரத்தின் எதிரொலி.

உண்மையில் கஷ்டப்படுவதன் மூலம்தான் நாம் சுதந்திரமடைய முடியும். துன்பப்படாமல் எந்த நாடும் உயர்வடைவதில்லை.

நாம் அதற்கு ஒரு புறநடையாக இருந்து விடலாமென்று நினைத்தவர்கள் ஏமாற்றமடைந்துவிட்டனர்.

சும்மா இருக்க அதிகாரம் கிடைத்துவிட்டதால் அது போதைவஸ்துப்போல் தலைக்கேறிவிட்டதை இன்று நாம் பார்த்துத் துன்பப்படும் நிலை கைகெட்டியிருக்கிறது.

இதனைச்செவ்வனேபுரிந்து கொள்ளாமல் தவறுகளைத் தட்டிக்கழித்து, கோலாகல கொண்டாட்டம் செய்வதானால் சரித்திரம் கற்பிக்கும் பாடங்களைப் உணரமுடியாத அறிவிலிகள் ஆவோம்.

எனவே இங்கு வாழும் ஒவ்வொரு பிரஜையும் இத்தவ்விய தினத்தை, தன்னிடம் இருக்கும் தெய்வீகத் தன்மைக்கு விரோதமான, மிருகத் தன்மைக்கு ஆதரவான செயல்களில் ஈடுபட்டிருந்தால் அதற்குத்தெய்வ மன்னிப்பைக்கோரி சுய பரிசோதனையில் ஈடுபடுதல் இன்றியமையாதது.

ஆத்மசக்தி, துன்பங்களை அனுபவிக்கும் பலத்தை ஊட்டுகின்றது. உண்மையான சுயராஜ்யம் என்பது தன்னை அடக்கிஆள்வது தமிழ் மக்கள் நன்கறிந்த உண்மை.

ஆத்ம பலத்தின் அபார சக்தியை நாம் உணர முடியுமானால் இன்றைய நாகரீகத் தீயில் நாசமாகிக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து நாட்டைப் பாதுகாக்க முடியும்.

பிரதமரின் சுதந்திரதினச் செய்தி:

# "வேலைநிறுத்தம், கலவரங்கள் மூலவளத்தை பாழ்படுத்தி விட்டன"



முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் சொந்தக்கால்களில் நிற்கத்துணிந்து நாட்டு அபிவிருத்தியை நாமே உருவாக்கும் விதத்தில் எமது நாட்டில் இருந்த அந்நிய ஆதிக்கத்தைத் நாம் தூக்கி எறிந்தோம். அன்றிலிருந்து இன்று வரை எமது சுதந்திரவாழ்க்கை துரிதமாக வளர்ந்துள்ளது. எட்டு அரசாங்கங்கள் மக்களின் சுதந்திரவாக்களிப்பால் உருவாக்கப்பட்டன. சாதாரண மனிதர்களுக்காக பல அபிவிருத்தித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன.

நாம் அடைந்த நஷ்டங்களை நோக்கினால் எம்மிடையே பிரச்னைகள் இருந்திருப்பதுவும் தெளிவாகிறது. எமதுநாட்டில் பெரும்புரட்சி யொன்று நடந்தது. இத்துடன் மோசமான இனக்கலவரங்களும் நிகழ்ந்துள்ளன. ஏனையவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் இயற்கை அபாயங்களிலிருந்தும் விலகியிருப்பதை அறியமுடிகிறது.

எவ்வாறாயினும் நாம் எதிர்பார்த்த துரித அபிவிருத்தியை அடையமுடியாதுள்ளது எமது சொந்தத் தவறுகளே இதற்கு காரணமாகும்.

வேலை நிறுத்தங்கள், கலவரங்கள் என்பன எமது பலத்தை நலிவுறச் செய்துள்ளன. இத்துடன் எமது மூலவளங்களையும் பாழ்படுத்தியுள்ளன. இதன் விளைவாக அரசியல் கட்சிகள் இந்நாட்டின் பல்வேறு இனங்கள், சமூக வகுப்புகளிடையே பகை உணர்வுகள் தோன்றியுள்ளன.

கடந்த 36வருடங்களாக இச் சமூக விரோத சக்திகள் எம் மத்தியில் இருந்தே வந்துள்ளன. இவற்றை தொடர்ந்தும் செயல்பட வைத்து அழிவுகளுக்கு மேலும் வழிவைப்பதா?

நாம் இலங்கையை அபிவிருத்தி செய்வதானால் ஒவ்வொருவர் மனதிலிருந்தும் சந்தேகங்களையும் வெறுப்புணர்வுகளையும் முழுமையாக நீக்கவேண்டும். இதன் மூலமே சகலருக்கும் அமைதியுள்ள உறுதியான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

இந்த முக்கியமான சுதந்திர ஆண்டு விழா எமது மக்கள் மத்தியிலே ஒழுங்கு அமைதி, ஒற்றுமை செழிப்பு ஆகியனவற்றைத் தோற்றும் புதிய சகாப்தமாகட்டும்.

# "வல்லரசுகள் முஸ்லிம் நாடுகளை அடிமைப்படுத்த முனைகின்றன"

## இஸ்லாமிய மாநாட்டில் கொமெய்னி கண்டனம்

(தெஹ்ரான்)

"வல்லரசு நாடுகளாக தம்மைக் கருதிக்கொள்ளும் அமெரிக்காவும் ரஷ்யாவும், குறைவிருத்தி நாடுகளில் தமது ஆதிக்கத்தைப் பரப்பி அவற்றை அடிமைப்படுத்த முனைகின்றன. பலநாடுகளை தமது இலட்சியங்களை அடைவதற்கு பகடைக்காய்களாகப் பயன்படுத்துகின்றன. இன்றைய உலகில் ஆதிக்கப்போட்டியினை வலுப்படுத்தி தமது ஆதிபத்தியத்தை பலப்படுத்திக்கொள்ள மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளையும் அவை பயன்படுத்துகின்றன. முஸ்லிம் நாடுகளைப் பிரிப்பதற்காக அமெரிக்கா வகுத்த சதித்திட்டமே ஈராக எம்மைத்தாக்குவதற்கு வழி வகுத்தது ஈராக் அமெரிக்காவினதும் ரஷ்யாவினதும் வலையில் சிக்கியுள்ளது அதனை மீட்பது முஸ்லிம் உலகின் கடமையாகும்"

இவ்வாறு தெஹ்ரானில் நடைபெற்ற இஸ்லாமிய மகாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டுப்பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய ஈரான் இஸ்லாமியக்குடியரசின் வழிகாட்டியான இமாம் கொமெய்னி குறிப்பிட்டார்.

இம்மகாநாட்டுக்கு இலங்கையில் இருந்து அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனத்தின் தலைவரும் யாழ்பல்கலைக்கழக அரபு இஸ்லாமிய நாகரீகத்துறை விரிவுரையாளருமான மௌலவி கே. எம். எச். காலிதீன், ஈரான் இஸ்லாமியப் புரட்சிக்கு ஆதரவு வழங்கும் இலங்கைக்கிளையின் தலைவர் அல்ஹாஜ் பி. எம். யூசுப், பத்திரிகைத்துறை சார்பில் ஜனாப் எம். பி. எம். அஸ்ஹர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மிக அமைதியாகவும் சாதாரணமாகவும், எளிமையாகவும் பள்ளிவாசலோடு தமது வாசஸ்தலத்தைக் அமைத்துக் கொண்டு வாழும் இமாம் கொமெய்னி தமது உரையில் மேலும் கூறியதாவது.

இஸ்லாமிய ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டால் தனிப்பட்டவர்களின் ஆடம்பரங்களும், அதிகார ஆசைகளும் தவிடு பொடியாகி விடும் என அஞ்சுகின்றார்கள். இஸ்லாம் ஒரு சக்தியாக உலகில் மாறுவதைக் கண்டு அமெரிக்கா அஞ்சுகிறது எம்மிடையே சியா சுன்னு பேதங்களை ஏற்படுத்தி முஸ்லிம் உலகை கூறுபோட அது முனைகின்றது.

அமெரிக்காவோ ரஷ்யாவோ எங்களுக்கு எஜமானாகமுடியாது. இஸ்லாம் உலகமக்களை சமத்துவமாக மதிக்கின்றது. உலகமக்கள் இஸ்லாத்தின் சகோதரத்துவத்தின் மகத்துவத்தினை உணர்ந்து கொள்வதற்கு நாம் துணிவுடன் செயலாற்றவேண்டும். (கு)

## யாரிடம் சொல்லி அழ?

யாழ். பண்ணையில் உள்ள அரசாங்க கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் 7-6-83ல் நூற்றுஐம்பது 'ருேவைற்' இனக் கோழிக் குஞ்சுகளைப் பெற்றிருந்தேன். இவை பேராதனை அரசாங்க விவசாயப் பண்ணையில் இருந்து தருவிக்கப்பட்டவையாகும்.

ஆர். ஐ. ஆர்., வைற் லெகோன் ஆகியவற்றின் கலப்பாக விருத்தி செய்யப்பட்ட இவ்வினம் நோயை எதிர்த்து வளர்வதோடு தொடர்ச்சியாக முட்டையிடவும் கூடியது என்ற உத்தரவாதத்திலேயே வழங்கப்படுகின்றன. சரியான பராமரிப்பு முறைகளின்படி வளர்க்கப்பட்ட எனது கோழிகள் சுமார் ஐந்தரை மாத பராயத்தில் முட்டையிட ஆரம்பித்தன. ஒருமாத காலம் அவை தொடர்ந்து முட்டையிட்டன. பின்னர் சுமார் ஐம்பது கோழிகள் முட்டையிடாது அடைபடுத்துக் கொண்டன. இது ஒரு சுற்று வட்டமாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பண்ணை அரச கால்நடை வைத்திய அதிகாரியிடம் இது பற்றி ஆலோசனை கேட்டபோது, முட்டையிடுவதை ஊக்குவிக்கும் ஊட்டச்சத்து மருந்தொன்றைகூறி அதனை உபயோகித்துப் பார்க்கும்படியும் அதற்குப் பலன் இல்லாது போனால் கோழிகளை விற்பதைத் தவிரவேறு வழியில்லை என்றும் கூறினர். மருந்து பலன்ஏதும் தரவில்லை. இதனால், பல ஆயிரக் கணக்கில் செலவிட்டு ஆரம்பித்த கோழிப்பண்ணையை நிறுத்திவிடவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

இதற்கு யார் பொறுப்பு? இந்நிலை ஏற்படக் காரணம் என்ன?

இது கண்டிப்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஆறு ரூபா வீதம் மூன்று மாதங்களின் முன்னரே முற்பணம் செலுத்திக் காத்திருந்து பல ஆயிரம் ரூபா வரை செலவிட்டு இப்பண்ணையை ஆரம்பித்தும், வெண்ணை திரண்டு வரத்தாழி உடைந்த கதைபோலாயிற்றேஎன எண்ணிக்கலங்க வேண்டியுள்ளது.

கொழும்பில் இருந்து அகதிகளாய் வந்து சொந்த மண்ணில் ஏதோ செய்து வாழ்வோமென எண்ணி, கோழிப்பண்ணை அமைத்தவர்கள் தங்கள் கதியும் என்னாகுமோ என்று இப்பொழுது விழிக்கிறார்கள். அது மட்டுமின்றி, இந்த விஷயத்தை அறியாத பலர் பண்ணையின் குஞ்சுகளுக்காகத் தொடர்ந்தும் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள்.

அரசாங்க அதிகாரிகளுக்கு இது சமர்ப்பணம்.

தி. குகானந்தன்
மாவிட்டபுரம்.

## மக்கள் கருத்து

## விவசாயிகள் பாதிப்பு

(வேலணை)

வேலணை விவசாய விஸ்தரிப்பு நிலையத்தில் விதைகள் இல்லாததால் தீவுப்பகுதியில் பயிர் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். (கு)

## யாழ். கூட்டுறவு வைத்தியசாலை

(கல்வியங்காடு)

யாழ் மாநகர கூட்டுறவுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வந்த கூட்டுறவுவைத்தியசாலையை அடுத்தமாத முற்பகுதியில் மீண்டும் இயக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வைத்தியசாலைக்குத் தேவையான சகல தர ஊழியர்களும் நியமனம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிகிறது. (கு)

## ஈழத்துச் சிதம்பர புராண ஆசிரியர் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பேரறிஞரும், பிரபல எழுத்தாளருமான ஈழத்துச் சிதம்பர புராண ஆசிரியர் நவாலியூர் புலவர்மணி சோ. இளமுருகனாரின் பதின்மூன்றாவது ஆண்டு நினைவு தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்திலுள்ள சிவாச்சிரமத்தில் இடம்பெற்ற இந்நினைவு தின வைபவத்தில் பல பிரமுகர்களும், புலவர்மணியின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

விசேட பூசைகளைத் தொடர்ந்து ஈழத்துச்சிதம்பர புராணப்பாடல்கள் பாடப்பட்டன. அப்பாடல்களுக்கு பண்டிதர் க. மயில்வாகனனால் பயன் சொல்லப்பட்டது.

இளைப்பாறிய வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. சபாபதி, நாரைநகர் சைவ மகா சபைத் தலைவர் திரு. ஆ. கந்தையா, பண்டிதர் க. மயில்வாகனனார், வித்துவான் க. முருகேசன், சைவமணி மு. சபாரத்தினம், திரு. செ. ஆறுமுகம் ஆகியோர் புலவர்மணி இளமுருகனாரின் பெருமைகளைப் பேசினர்.

(கு)

# யாழ். செயலகத்தில் சுதந்திர தின வைபவங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 36வது சுதந்திரதின வைபவங்கள் இன்று சனிக்கிழமை காலை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா காலை 8 30 மணிக்கு தேசியக் கொடியை யாழ் செயலகத்தில் ஏற்றிவைப்பார்.

இதனையடுத்து பாடசாலை மாணவர்கள் தேசிய கீதம் இசைப்பார்கள். சுதந்திர தினத்தைப் போட்டி யாழ். செயலகத்தில் பொங்கல் பரிமாறலும் நடைபெறும்.

யாழ் செயலகத்தில் இடம்பெறும் சுதந்திரதின வைபவங்களில் யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர்களும், உதவி அரசாங்க அதிபர்களும் ஊழியர்களும் கலந்துகொள்வார்கள். (மா)

# பாடசாலை தமது என்ற உணர்வு மாணவர்க்கு ஏற்படவேண்டும்'

(மானிப்பாய்)

''நாம் பயின்று கொண்டிருக்கும் பாடசாலை தமது என்ற ஓர் உணர்வு மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும். அப்போதுதான் இதனைப் பேணிப்பாதுகாக்க, சுத்தமாக வைத்திருக்க இதன் பெரு வளர்ச்சியில் அக்கறைகாட்ட அவர்கள் மனம் ஒன்றி முன் வருவார்கள்.''

இவ்வாறு ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் திருமதி பா. கந்தசாமி இப்பாடசாலையில் ''எமது பாடசாலை வாரம்'' தொடர்பான வைபவத்தில் மாணவர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் பாடசாலை நலம்விரும்பிகள் ஆகியோர் கலந்துகொண்ட இந்த முதல்நாள் நிகழ்ச்சியில் அதிபர் மேலும் பேசுகையில் ''மாணவர்களைப் பாடசாலைகளில் சேர்ப்பதோடு தமது கடமைகள் முடிந்து விடுவதாக பெற்றோர் நினைத்து விடாது தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி பற்றி தொடர்பான அக்கறைகாட்டுவதோடு பாடசாலைத் தேவைகளையும் கருத்திற்கொண்டு தம்மாலான ஒத்துழைப்பை நல்க முன்வரவேண்டும்'' என்றார்.

ஆசிரியர் திரு. கே. கார்த்திகேசன் பேசுகையில் ஒத்துழைப்பே ஒரு ஸ்தாபனத்தைக் கட்டியெழுப்பும் என்று கூறினார். (கு)

## மீண்டும் வேலை

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பு தபால் அலுவலகத்தில் தபால் சேவையாளராகக் கடமையாற்றி கடந்த ஒரு வருடமாக வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த கே. சிவகுருநாதன் என்பவருக்கு இலங்கை தபால்—தந்தி சேவையாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. செ. சபாரத்தினம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக மீண்டும் வேலை கிடைத்துள்ளது.

திணைக்களப் பழி வேண்டல் காரணமாக இவர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ். தொண்டமானிற்கும், இ. தொ. க. செயலாளரும் தபால் தந்தி சேவையாளர் காங்கிரஸ் தலைவருமான எம். எஸ். செல்லச்சாமிக்கும் பிரஸ்தாப தபால் — சேவையாளர் காங்கிரஸ் செயலாளர் திரு சபாரத்தினம் முறையிட்டிருந்தார். இதைத்தொடர்ந்து உரிய விசாரணையின் பின் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட சிவகுருநாதனிற்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 4-00 | சுதந்திரதினக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் |
| 6-00 | 'பிக் புளூ மாபிள்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-25 | சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்) |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | விசேட சுதந்திர தின நிகழ்ச்சி |
| 7-45 | உலகப்பாடல்கள் |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | நாடகம் (சிங்களம்) |
| 9 00 | இசைநிகழ்ச்சி (சிங்களம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 10-00 | 'ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்' (துப்பறியும் தொடர்) |
| 10-30 | உலகச் செய்தி தலைப்புக்கள் |
| 10-35 | 'ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்' தொடர்ச்சி |

### கல்முனைக்கிளை கூட்டுறவு வங்கி

# மோசடி வழக்கு வாபஸ் எதிரிகள் விடுதலை

(இரா. உதயகுமார்)

மட்டக்களப்புமாவட்ட கூட்டுறவு வங்கியின் கல்முனைக் கிளையில் நம்பிக்கைமோசடி செய்ததாக அதன் முகாமையாளர் உட்பட மூவர்மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அரச தரப்பினால்வாபஸ்பெறப்பட்டது. இதனையடுத்து சந்தேக நபர்களை மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. கி. பாலகிட்ணர் விடுதலைசெய்தார்.

மேற்படி வங்கியில் 8லட்சத்து 67ஆயிரத்து 997ரூபா 20சதம் நம்பிக்கை மோசடி செய்ததாக அதன் முகாமையாளர் எஸ், டி. பிரான்ஸிஸ் அவரது உதவியாளர்களான ரி. வாமதேவன், கே. பேரின்பம் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கை மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ரி. டி. கே. நெத்தசிங்க முன்னிலையில் விசாரணை செய்தார் தொடர்ந்து கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் மேல் நீதிமன்ற நீதிபதி திரு. கி. பாலகிட்ணர் இவ்வழக்கை விசாரணை செய்தார்.

அரசதரப்பில் இவ்வழக்குடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள், மற்றும் சான்றுப்பொருட்கள் சமர்ப்பிக்கப்படாததால் இவ்வழக்கை வாபஸ் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இத்துடன் இவ்வழக்கில் 65 சாட்சியங்கள் இருந்தபோதிலும் 5 சாட்சியங்கள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன. இதனையடுத்தே நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரிகளை விடுதலை செய்தார்.

அரச தரப்பில் அரச சட்டத்தரணி திரு. ஸ்ரீஸ்கந்தராசாவின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. ஜோ பெரேரா ஆஜரானார்.

முதலாம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஏ எஸ். ஸி டி. சில்வா கியூ ஸியும், இரண்டாம் மூன்றும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஏ. நாகேந்திராவும் ஆஜரானார்கள். [கி]

## நியமனம்

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரியாக யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த திரு. கு பீலிக்ஸ் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார். (கு)

## நல்லூர் மகளிர்க்கு கோழிக் குஞ்சுகள்

(கோண்டாவில்)

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிரிடையே சேமிப்பையும் கிராமப் பொருளாதாரத்தையும் வளர்க்கும் நோக்கமாக கோழிக்குஞ்சுகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் ஆரம்ப கட்டமாக சங்கத்தின் இருபது கிளைகளிலும் இருந்து தலா ஒருவர்படி இருபது பெண்களுக்கு இருபத்தைந்து கோழிக்குஞ்சு வீதம் வழங்கப்படவுள்ளது. (கு)

## கூட்டுறவுச்சங்கம் பொறுப்பேற்கும்

[மன்னார்]

திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சினால் மன்னாரில் நடத்தப்பட்டுவரும் பால் சேகரிப்பு விற்பனை நிலயத்தை மன்னார் அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க மன்னார் மாவட்ட பால் பண்ணை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்கவுள்ளது

மன்னார் திட்டமிடல் அலுவலகத்தில் நடைபெற்ற பால் பண்ணை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கக் கூட்டத்தில் இது பற்றி தீர்மானிக்கப்பட்டது. (கு)

## அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த ஒருவருக்கு யாழ் நீதவான் நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது

குறித்த அபராதத் தொகையை காரவெட்டி பரமானந்த ஆச்சிரமத்திற்கு வழங்க உத்தரவிட்ட நீதிபதி, இதுசம்பந்தப்பட்டவரை எச்சரிக்கையும் செய்தார் யாழ்ப்பாணம் கலால் பகுதியினர் இச்சட்ட விரோத விற்பனையைக் கண்டுபிடித்து வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். (வன் — நிரு.)

## தவறுக வாகனம் செலுத்தியவருக்கு 1000 ரூபா பிணை

[நல்லூர்]

கவனயீனமாக வாகனத்தைச் செலுத்தி ஏற்பட்ட விபத்தைப் பற்றிப் பொலிசாருக்கு முறையிடத் தவறிய வாகன சாரதி குற்றத்தை ஒப்புக் கொள்ளவே யாழ்ப்பாண நீதிபதி, எஸ். நாகராசா ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

தண்டனை வழங்குவதை மார்ச் மாதம் 14 - ம் தேதிக்கு ஒத்திவைத்த நீதிபதி எதிரி க. சந்திரலிங்கத்தை அன்றைய தினம் உரிய சாரதிச் சான்றிதழ் ஆகியவற்றை சமர்ப்பிக்குமாறு கட்டளை விடுத்தார். எதிரியின் சார்பில் சட்டத்தரணி எஸ். இமாம் ஆஜரானார்.

## யாருடையது ?

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. அருளப்பு கிறிஸ்தி என்பவர் செல்வி நடராசா தேவரஞ்சனின் அடையாள அட்டையைக் கண்டுஎடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நாட்களில் பெற்றுக்கொள்ளவும்.

# இந்திய மீனவருக்கு விளக்கமறியல்!

(நல்லூர்)

காரைநகரில் உள்ள கடற்படையினரால் இலங்கை கடற்பிராந்திய எல்லையில் மீன் பிடித்ததாகக் கைது செயய்யப்பட்டு ஆஜர்படுத்தப்பட்ட இந்திய மீன்பிடி வள்ளத்தைத் தடுத்து வைத்து, வள்ளத்தைச் செலுத்திய இந்திய மீனவரை விளக்கமறியலில் வைக்கவும் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி ஜே ஜி ஆசீர்வாதம் உத்தரவு வழங்கினார்.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் மேல்நீதிமன்ற நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்றவிசாரணையில் மீன்பிடி உத்தியோகத்தர் என். இராதாகிருஷ்ணன் சாட்சிகளை நெறிப்படுத்தினார். கடற்படை அதிகாரி ஐ. பெரேரா தனது சாட்சியத்தில் பின் வருமாறு கூறினார்.

''இலங்கைக் கடற்பிராந்தியத்தில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டபோது இப்மீன்பிடி வள்ளத்தைக் கண்டு கைதுசெய்தேன்.

கைது செய்யும் வேளையில் இவ்வள்ளம் ஊர்காவற்துறைக் கரையிலிருந்து ஒன்பது மைல் தொலைவில் மீன் பிடித்துக் கொண்டிருந்தது. இவ்வள்ளத்தில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஜோர்ஜ், நாகப்பன், அடைக்கலம், கார்மேகம் மாணிக்கம், பாதர், அந்தோனி என்று அழைக்கப்படும் மீனவர்கள் காணப்பட்டனர். அத்துடன் 100 கிலோ மீனும் அவ்வள்ளத்தில் இருந்தது என்று தனது சாட்சியத்தில் கூறினார்.

வள்ளத்தைச் செலுத்திய ஜோர்ஜ் என்ற மீனவரை ஐயாயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிபதி அனுமதி அளித்தபோதும் பிணைப் பணம் செலுத்தாமையால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்திய மீன்பிடி வள்ளம் ஊர்காவற்றுறை பொலிசாரின் கண்காணிப்பில் வைக்கப்பட்டு உள்ளது. ஏனைய இந்திய மீனவர்கள் நாடு கடத்தப்படுவதற்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டு உள்ளனர். இந்திய மீனவர்களின் நலனை சட்டத்தரணிகள் ஆர். பாலசுப்பிரமணியம், என். சிறிகாந்தா, செல்வி ஜே டி. இராஜப்பா ஆகியோர் கண்காணித்தனர்.

### ✯ யாழ்ப்பாணத்தில்

# நெற்செய்கை பாதிப்பு: மகாநாட்டில் ஆராயப்பட்டது

(நல்லூர்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதையபோகத்தில் நெற்செய்கை பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளதுஎன்ற தகவல், 1984 ஆம் ஆண்டு விவசாய அமுலாக்கல் திட்டம் சம்பந்தமான மாநாடு யாழ்ப்பாணம் கச்சேரியில் மேலதிக அரசாங்க அதிபர் எம். பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது வெளியானது.

விவசாயத் திட்ட அமுலாக்கம் பற்றிய மீளாய்வு சம்பந்தமான இம்மாநாட்டில் உதவி அரசாங்க அதிபர் (காணி) திரு. எஸ். பி. பாலசிங்கம், விவசாயம், விவசாய ஆராய்ச்சி அமைச்சின் உயர் அதிகாரிகள் எஸ். ஜெயபாலன், எம். சுந்தரசாமி உட்படப் பல மாவட்ட அதிகாரிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். இப்பாதிப்புக்கான காரணங்கள் இம்மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டன.

பாதகமான காலநிலை இப்பாதிப்புக்கு ஒரு முக்கிய காரணம் என்று கூறப்பட்டது. தற்போதைய போகத்தின் ஆரம்ப கட்டத்தில் வரட்சியும், காலந்தாழ்த்தி பெய்த பெரு மழையும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. விதை நெல், பசளைத் தட்டுப்பாடும் நெற்செய்கை பாதிப்புக்கு காரணிகள் என்றும் வலியுறுத்தப்பட்டது. சொச்சி, வெங்காயம், உருளைக் கிழங்குச் செய்கை பற்றியும் ஆராயப்பட்டது.

காலநிலையின் பாதிப்பிலிருந்து தப்பியுள்ள நெற்பயிரைக்கூட அறுவடை செய்து பலனையெடுக்க முடியாத நிலையில் யாழ்ப்பாண விவசாயிகள் இருப்பதாக இக்கூட்டத்தில் விவசாய உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (சு)

## காவலூரில் அஞ்சலி

(வேலணை)

அண்மையில் நெல்லியடியில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களின் ஆத்ம சாந்திக்கு ஊர்காவற்றுறையில்இருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஜே. எஸ் ஞானப்பிரகாசம் தலைமையில் நடந்த பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவுச் சபையின் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் இவ்மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (கு)

### புலோலி காணி அறவீட்டுப் பணம்:

# கொடுக்கத்தவறின் குற்றப்பணம்!

[புலோலி]

புலோலி கமநலச் சேவைப் பகுதிக்குட்பட்ட சொந்தக் காணிப் பயிர்ச்செய்கையாளர்களும் கமத்தொழில் காணியின் இருப்பாட்சியாளர்களும் குறித்த திகதிக்குள் ஏக்கர் அறவீட்டைக்கொடுக்கத்தவறினால் நீதிமன்ற நடவடிக்கை மூலம் அறவீட்டுக் குற்றப்பணம் பெற்றுக்கொள்ளப் படுமென புலோலிகமநலச்சேவைக்குழுத் தலைவர் அறிவித்துள்ளார்.

1979ம் ஆண்டின் 58ம் இலக்க கமநலச்சேவைகள் சட்டத்தின் 46(2) (பி) பிரிவின் கீழ் கமநலச் சேவைகள் குழுக்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் புலோலி கமநலச்சேவைகள் குழுவினது அதிகாரப்பகுதிக்குள் இருக்கும் சகல சொந்தக்காணிப் பயிர்ச் செய்கையாளர்களும் கமத்தொழில் காணி இருப்பாட்சியாளர்களும் 1983ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ம் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு ஏக்கருக்கு 6ரூபா ஏக்கர்அறவீடாகக் குழுவுக்குக் கொடுக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டது

சகல சொந்த காணிப்பயிர்ச்செய்கையாளர்களும் இருப்பாட்சியாளர்களும் 1983 -ம், 84-ம் ஆண்டிற்குரிய ஏக்கர் அறவீட்டை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 31 - ம் திகதிக்கு முன்பாக அவ்வப்பகுதிப்பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களிடம் செலுத்த வேண்டுமென்றும் தவறும்பட்சத்தில் நீதிமன்ற மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## மரணவிசாரணை அதிகாரிகளும் சங்கம் அமைத்தனர்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் மரணவிசாரணை அதிகாரிகள் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

மரணவிசாரணை அதிகாரிகளின் நன்மைகருதியே இவர்களது பிரச்சினைகளை எடுத்துக் கூறவே மேற்படி சங்கம் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதன் தலைவராக வவுனியா மாவட்ட பதில் நீதிபதி திரு. ஆர் வி. விவராஜா தெரிவாகியுள்ளார்.

செயலாளர், பொருளாளர், திரு. எஸ். பத்மநாதன் நிர்வாக உறுப்பினர்கள் கேசி அமிர்தலிங்கம், கே. பி செனிவிரட்ண, எஸ் காராளசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்

மரணவிசாரணை அதிகாரிகளுக்குத் தற்போது வழங்கப்படும் அலவன்ஸ் அதிகரிக்கப்படவேண்டும் மாவட்ட நீதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் பிரயாணச் செலவு மைலுக்கு பத்து ரூபா வீதம் அதிகரிக்கப்படவேண்டும்.

என்ற தீர்மானங்கள் சங்கத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இதன் பிரதிகள் நிதிமந்திரி வவுனியா அரச அதிபர், வவுனியா மாவட்ட நீதிபதி, அனுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி, பிரதமநீதியரசர், வவுனியா மாவட்ட மந்திரி ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகச் சங்கத் தலைவர் தெரிவித்தார். (கு)

## மண்டைதீவு நல்லுறவுக் குழு

(வேலணை)

மண்டைதீவுப் பகுதிக்கு பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் குழுவின் தலைவராக திரு. பி. அன்ரனி பெனடிக்டோ ஜே, பி.யும் செயலாளராக திரு. என். இராமச்சந்திரனும் யாழ். பொலிஸ் அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஐந்து பேர்கொண்ட குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. (கு)

## பொலிஸாருக்கு நியாய விலையில் சிற்றுண்டி

(மாவிட்டபுரம்)

பொலிஸாருக்கு நியாயவிலையில் சிற்றுண்டிகள் கிடைக்க வசதியாக காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சிற்றுண்டிச்சாலை ஒன்று திறக்கப்பட்டுள்ளது

பொலிஸ் நலன்புரிச் சங்க ஏற்பாட்டின் பேரில் பொலிஸ் நிலைய தங்கும் விடுதியில் அமைக்கப்பட்டுள்ள இச்சிற்றுண்டிச்சாலை பொலிசாரின் தேவையை நிறைவேற்றக்கூடியதாக விளங்கும் என தெரிவிக்கப்படுகிறது

இச்சிற்றுண்டிச்சாலை மூலம் பொலிசாருக்கு நியாய விலையில் சிற்றுண்டிகள் கிடைப்பதுடன் பொலிசார் சிற்றுண்டிகளுக்காக வெளியே செல்ல வேண்டிய நிலையும் இருக்காதென தெரிவிக்கப்படுகிறது.

## 'இறை வழிபாட்டை ஊக்குவிக்க வேண்டும்''

(யாழ்ப்பாணம்)

''ஆலயங்களில் மட்டும் இறைவனை வழிபடுவதுடன் நின்றுவிடாது. இல்லங்கள் தோறும் இறை வழிபாட்டை நாம் ஊக்குவிக்கவேண்டும்'' மேற்கண்டவாறு இருபாலை சைவபரிபாலன சங்கத்தின் ஆதரவில் கோப்பாய் தெற்கு ''தங்க விலா'' இல்லத்தில் நடைபெற்ற இல்ல பஜனையை திருவிளக்கேற்றி வைத்துப் பேசுகையில் மேற்படி சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. க. பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

பெருந்திரளாக அயலவர்கள் கூடியிருந்த இவ்வில்ல பஜனையை, சங்கத்தின் கூட்டு வழிபாட்டுச் செயலாளர் திரு வ நடராசா நடாத்தினர். பௌர்ணமி தினங்கள்தோறும் இப்பஜனையை தங்கள் தங்கள் இல்லங்கள் தோறும் நடாத்தப்பலர் இவ்வைபவத்தில் முன்வந்தனர் (கு)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவை மன்றம் இளைஞர் கழகம் மல்லாகம் தெங்கு பனம்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவுடன் பனம் பொருள் உற்பத்தி பற்றிய கருத்தரங்கையும் மூன்றுமாத பயிற்சி வகுப்பொன்றையும் நடத்த முன்வந்துள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் சுமார் 40 யுவதிகளுக்கு பயிற்சியளிக்கப்படும். இதனையொட்டி இன்று காலை பனம்பொருள் அபிவிருத்தி' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை நடத்த ஒழுங்கு செய்துள்ளது.

இக்கருத்தரங்கிற்கு பிரதம விருந்தினராக பனம்பொருள் தலைவர் திரு. ஆர். சம்பந்தம் கலந்து கொள்வார்,

பனம்பொருள் அபிவிருத்தி சங்கத் தலைவர் திரு. க நடராசா, தொழிலதிபர் திரு. க. கனகராசா. மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் ஆலோசகர் திரு சு. ஸ்ரீபாஸ்கரன், யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு சிவானந்தமூர்த்தி இளைஞர் சேவை அதிகாரி திரு. வே. விவேகானந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். இக்கருத்தரங்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## சிரமதானம்

(மன்னார்)

தலைமன்னார் அரசினர் வைத்தியசாலை சுற்றுடல், தலைமன்னார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களினால் சிரமதானம் மூலம் சுத்தமாக்கப்பட்டது.

இச்சிரமதானம் அண்மையில் பாடசாலை அதிபர் திரு. ஞானம்குலாஸ் தலைமையில் நடைபெற்றது. (கு)

## இன்றைய பலன்

ரத மாதம் 21ம் திகதி
4—2—84
சனிக்கிழமை

மேடம்: சகோதரவழிச் சஞ்சலம் ஆனந்தமும் ஆத்திரமும் கலந்த நிலையில் அவதிப்படுவார்கள். இதயப்படுதாவில் துன்பத்தின் நிழல் படரும் தெய்வ நம்பிக்கை நன்று.

இடபம்: மாணவர்களுக்குப் பொன்னான தினம் எதிர்பாரதவரவுக்கு இடமுண்டு பொதுவாக எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி காணப்படும்.

மிதுனம்: பெரியோர் ஆதரவு உண்டு புத்திரர் மகிழ்ச்சியும் புண்ணிய விருப்புமுண்டாம். நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகலாம்.

கடகம்: நிலையும் தடுமாறும் நண்பர்களே காலை வாரிவிடக் கூடும். பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும் நிதானம் அவசியம்.

சிங்கம்: களஸ்திரவழிப் பெருமை உண்டு; காதலர்களுக்கு கற்கண்டான தினம். சுற்றுடலிலும் வேண்டியதைச் சாதிப்பீர்கள்.

கன்னி: எண்ணிய காரியம் தடைப்படும் பொருள் விரையம் ஏற்படும். வாகனம் செலுத்துவோர் நிதானம் செலுத்தவும் துன்பகரமான தினம்.

துலாம்: நீண்டநாள் பிரச்சனையில் இன்று சமரச முடிவு காண்பீர்கள். அரசியலில் சிலருக்கு ஆர்வம் பிறக்கும் புண்ணிய விருப்பும் மேவிடும்

விருச்சிகம்: மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும் இடமாற்றம் ஏற்படும் தொழில் துறையிலும் நன்மை பிறக்கும்.

தனுசு: சகோதரவழிப் பெருமை சேரும் இல்லத்தில் இனிமை தவழும். அறிஞர்களின் ஆதரவுமுண்டு சுப தினம்,

மகரம்: துன்பத்தின் ரேகை படரும் எவ்விடயத்திலும் தயக்கம் ஏற்படும் அவரசப் போக்கை தவிர்க்கவும்.

கும்பம்: பணவிடயத்தில் கவனம் செலுத்தவும் குடும்ப மனச் சஞ்சலமும் உண்டு. நாவடக்கம் விரும்பத்தக்கது.

மீனம்: எழுத்தாளர்களுக்கு சிறப்பு மேலோங்கும் தானிய விருத்திக்கு இடமுண்டு திருப்திகரமான முன்னேற்றம் உண்டு சிறப்பான தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை
புத்திரன் வே. குவேந்திரன்

## பயணிகள் தொகை அதிகரிப்பு

(மன்னார்)

தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் சென்றுவரும் பிரயாணிகளின் தொகை மீண்டும் அதிகரித்துள்ளது.

இதனால் வாரத்தில் 3 தடவைகள் நடைபெறும் கப்பல் சேவையை வாரத்தில் 8 தடவைகள் நடத்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஆலோசனைகள் கைவிடப்படுமெனத் தெரியவந்துள்ளது (கு)

## ஆதனவரியை அறவிடுவதற்கு கிராமோதய சபையின் உதவி

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திச்சபை உப அலுவலகங்களில் செலுத்தப்படாது நிலுவையாக இருக்கும் ஆதன வரியை வசூல்செய்வதற்கு கிராமோதயசபைகளும் பயன்படுத்தப்படவுள்ளன

இதுபற்றிய சுற்றுநிருபம் சகல அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இச்சுற்று நிருபத்தில் கிராமோதய சபைகள் வசூல்செய்யும் ஆதன வரிக்கு அதற்குரியதரகுப்பணம் அந்தந்த கிராமோதய சபைகளுக்கு வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது

மாநகர, பட்டினசபை பிரதேசங்களுக்குள் குறிப்பிட்ட ஆண்டில் செலுத்தப்படவேண்டிய ஆதனவரியை முன்பே செலுத்தி வரிக்கழிவு கொடுப்பது போன்று இப்பகுதியில் முன்பாக பணம் செலுத்துபவர்களுக்கும் கழிவு கொடுக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளது

ஆதனவரி சேகரிப்பில் ஈடுபட்டுள்ள நடுக்கட்டு உத்தியோகத்தர்களின் தரகுப்பணமும் அதிகரிக்கப்படுமெனவும் இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)

## ஜூலை இனகலவரத்தில் உயிரிழந்த அனைவருக்கும் கம்யூ. கட்சி அனுதாபம்

(கொழும்பு)

கடந்த ஜூலையில் நடந்த இனக்கலவரத்தில் உயிரிழந்த அனைவருக்கும், ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதென்றதீர்மானம்,கொழும்பு நகர மண்டபத்தில் நடந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் நிறைவேறியது.

இதற்கு முன்னரும் நடந்த கலவரங்களில் உயிரிழந்தவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதென்றும், அத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில், அமைதியையும், பல சமுகங்களுக்கிடையே ஒற்றுமையையும் விரும்பும் மக்கள், இப்படியான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறுது பார்த்துக் கொள்ள முயற்சி எடுக்கவேண்டும் என்று மற்றொரு தீர்மானமும் நிறைவேறியது,

1980ம் ஆண்டு நடந்த பொது வேலை நிறுத்தத்தில் வேலையிழந்த பலர் வேலைக்கு திரும்பியுள்ளார்களென்றும், வேலையிழந்துள்ள மற்றவர்களுக்கும் மீண்டும் வேலை வழங்கப்பட வேண்டும் என்றும், மற்றொரு தீர்மானம் நிறைவேற்றியது. (க)

## இடமாற்றம்

(சாவகச்சேரி)

கைதடி தபால் அலுவலகத்தில் கடந்த 13 வருடங்களாக உதவி தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு எஸ். திருலோகசிங்கம் இம் மாதம் தொடக்கம் நுவரெலிய மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (கு)


# I.C.M.A. - A, B, P 1.

பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருந்த மாணவர்களுக்கு கட்டணத்தில்

## விசேஷ சலுகை

ICMA - SECTION A - 175/-
ICMA - SECTION B - 175/-
ICMA - PART I - 175/-

* முழுப் பாட நெறிகளுக்குமுரிய பாடக்குறிப்புகளும் 16 பரீட்சை வினாத்தாள்களும் இலவசம்.
* 1976-ம் ஆண்டு முதல் 1983-ம் ஆண்டு வரைக்கும் நடந்த 16 பரீட்சைகளில் வந்த வினாக்களும் முழுமையாக இந்த வகுப்புகளில் செய்யப்படும்.

கடந்த காலப் பரீட்சைகளில் மிகக் கூடிய சித்திகளை எமது மாணவர்களே பெற்றிருக்கின்றனர்.

**CANTABIA INSTITUTE**
(SHOOT OF OXONIA)
21, MAIN STREET, JAFFNA.
TELEPHONE: 24201



# பயிற்சிகள்

● ரெலிவிஷன் ● வீடியோ டெக் றிப்பியறிங்
● எயர் கொண்டிசனிங் ● எலெக்ரிக்கல் வயறிங்
● வெல்டிங் ● HOTEL MANAGEMENT ● FRENCH

வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் வேலைசெய்வதற்கேற்றமுறையில் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

ஆரம்பம் 09-02-84

THE SCHOOL OF COMPUTER STUDIES
5 2/1, கனகரத்தினம் கட்டிடம் (றெயில்வே கடவை அருகாமை)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30 6-30
எம் ஜி.ஆர்-கே.ஆர்.விஜயா
நல்லநேரம்
(புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-30,
எம். ஜி ஆர்.—ஜெயலலிதா
அன்னமிட்ட கை

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். —லதா
சிரித்து
வாழவேண்டும்

9-2-84 வரை
வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
நீரும் நெருப்பும்
(புதிய பிரதி-கலர்)

வின்ஸர் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
52-வது நாளாக
சிவகுமார் ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்

மனோகரா (யாழ். நகர்)
Daily 10-30 a.m. 2-15,
4-45, 7-00 p.m. 9-30
Now Showing
DE BORIS — DUROV
IN
"Pirates of the
20th Century"
Action Packed
Scope Color
திகிலூட்டும் சம்பவங்கள்
நிறைந்தன.

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
Kurt Russel
USED CARS
(Sex - Comedy - Color)
திரைவானில் அதிசயிக்க வைக்கும் கார் ஓட்டங்கள் பரபரப்பூட்டும் சண்டைகள் களிப்பூட்டும் நகைச்சுவை இன்னும் எத்தனையோ-முன்னர் திரையிட்ட சமயம் பார்த்தவர்களே மிக ஆவலுடன் பார்க்கின்றூர்கள் - பார்க்காதவர்களுக்கு அரிய வாய்ப்பு கடைசித்தினம் 5-2-84

லிடோ (யாழ்நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.—லதா
நீதிக்கு
தலைவணங்கு

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-00, 9-00
முத்துராமன் - கவிதா
தேங்காய்சீனிவாசன்
காற்றினிலே வரும்
கீதம்
(ஈஸ்மன் கலர்)
பஸ்சேவை இரவு 9-00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது தொடர்ந்து மாலைக்காட்சி 6-00 மணிக்கு ஆரம்பமாகும்.

அரசின்.

8-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தொகை வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள், பாதிக்கப்பட்டு, வந்துள்ள 600 ரூபாவுக்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு உதவிப்பணம் பெற்றுக்கொடுக்க யாழ் உதவி அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்தகையோர் உடனடியாக யாழ். உதவி அரசாங்க அதிபருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (கு)

ஹரன் (யாழ். நகர்)
பஸ்சேவை இரவு 9 மணி வரை நீடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாலைக் காட்சி 6 மணிக்கு ஆரம்பமாகும். அழகிய மலேயா நாட்டின் இயற்கைப் பின்னணியில் "வேண்டும் வேண்டும் உங்கள் உறவு' என்று கானமிசைத்த இளங்காதலரின் கதை
சிவாஜி, ஸ்ரீப்பிரியா, நடித்த
வசந்தத்தில்
ஓர் நாள்
(ஈஸ்மன் கலர்)

7 "சூப்பர் ஹிட்"
பாடல்களுடன் மங்கையர் மனங்கவர்ந்த வண்ண காதலோவியம்.
ஸ்ரீகலா (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-10,
மோகன்... பூர்ணிமா
பயணங்கள்
முடிவதில்லை

# தாச்சி சுற்றுப் போட்டி:
# சாம்பியன் போட்டி இன்றும் நாளையும்!

(யாழ்ப்பாணம்)

சுதுமலை யுவசக்தி சனசமூக நிலையத்தின் தாச்சி சுற்றுப் போட்டியின் 'சாம்பியன்' போட்டி இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

இந்த இறுதிப் போட்டியில் 'பி' குறூப்பில் தெரிவான விளையாட்டுக்கழகங்கள் இன்று மோதுகின்றன. 'ஏ' குறூப் கழகங்கள் நாளை மோதிக் கொள்ளும்.

பல ரசிகர்களின் கோரிக்கை மீது சினேகபூர்வமான தாச்சிப் போட்டியும் நடைபெறவிருக்கிறது. நாவலர் வி கழகம், ஐக்கிய வி. கழகம், அண்ணா வி. கழகம், சாந்த விநாயகர் வி. கழகம் ஆகியவை மேற்படி போட்டியில் கலந்து கொள்ளும்.

வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட மேற்படி தாச்சி சுற்றுப்போட்டியில் தூர இடங்களிலிருந்து ஏராளமான கழகங்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் ஜனசக்தி ச. ச. நிலையம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் ஜனசக்தி சன சமூக நிலைய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: செ. ஜீவராசா, உபதலைவர்: வ. கண்ணசலிங்கம், செயலாளர்: இ. இரவீந்திரராயூ, உபசெயலாளர்: க. விமலேஸ்வரன், பொருளாளர்: ந ஜீவறெட்ணம், விளையாட்டு: க. செல்வராசா, கலை: பா. தர்மலிங்கம், நிலையப் பொறுப்பாளர்: செ. ஆனந்தராசா, நூலகப் பொறுப்பாளர்: கி. குமாரசாமி, கணக்குப்பரிசோதகர்: மு. சந்திரராசா. உறுப்பினர்கள்: த. இரவீந்திரன், சி. ஜெயசூரி, க. நல்லராசா, அ. சந்திரகுமார். (கு)

## புதிய நிர்வாகிகள்

மன்னர்

பேசாலை வாசகர் வட்டத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் பேசாலை பொது நூலகத்தில் அண்மையில் நடைபெற்றது

இக்கூட்டத்தின்போது இடம் பெற்ற புதிய நிர்வாகிகள் தெரிவின்போது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: திரு. ஜே மார்சலஸ் பீரிஸ், உபதலைவர் திரு. டெனிஸ் லெம்பேட், செயலாளர்: திரு. எல். தேவதாஸ் பீரிஸ், உபசெயலாளர்; திரு. கிறிஸ்றி றெவ்வல், பொருளாளர் திரு. பாக்கியம் குரூஸ், 5 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டிது. (சூ)

## விளையாட்டுக் கழகம் வெற்றி

(மன்னர்)

தலைமன்னர் இளைஞர் கழகத்தினால் நடத்தப்பட்ட கந்தையா வெற்றிக்கிண்ணத்திற்கான சரபந்தாட்டப் போட்டியில் தலைமன்னர் துறை வாலிபர் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது

மன்னர் துறை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இக் காபந்தாட்டப் போட்டியில் 14 விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்டன (சூ)

## 5ம் ஆண்டு நினைவு அஞ்சலி
### வின்சன் மைக்கேல் செபஸ்ரியன்



எங்களைப் பிரிந்து இறைவனடி சேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

என்றும் மறவா
அன்பு மனைவி,
பிள்ளைகள்.
பேரப்பிள்ளைகள்.

33, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

504

வெற்றிடங்கள்
பின்வரும் வெற்றிடங்களுக்கு
8-2-84க்குமுன்னர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
ENGINEERING FOREMAN
NDT அல்லது சமமான கல்வித் தகமை
STEEL FABRICATION சார்ந்த வேலைகளில்
முன் அனுபவம் விரும்பத்தக்கது.
CIVIL DRAUGHTSMAN
QUANTITY SURVEYING, வீடுகள், திட்டமிடல்,
மதிப்பிடுதல் முதலியவற்றைக் கையாளும் திறன்
அவசியம்.
டைனமிக் என்ஜினியரிங்
லிமிட்டெட்,
43, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



திரு. சபாபதி தம்பாப்பிள்ளை
(இளைப்பாறிய P. W. D. ஓவசியர்)

உதயம்: 6-10-1920 உதிர்வு: 17-1-1983

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்த எங்கள் அன்புத்தெய்வமே! எங்களை ஆருத்துயரத்தில் ஆழ்த்தி முருகன் திருவடி சேர்ந்து வருடம் ஒன்று பூர்த்தியாகி உள்ளது. உங்கள் அன்பு நினைவுகளும் ஆற்றொணு பிரிவுத்துயரும் எங்கள் இதயத்தை விட்டு என்றும் அகலாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்.

அன்பு மனைவி பிள்ளைகள். மருமக்கள்,

"ரத்தின விலா" அருமைப்பேத்தி.
சங்கானை.

367

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

1. அம்பலவாணர் கந்தப்புவும்
2. பெண் லீலாவதியும் இருவரும் திருநெல்வேலி.
வழக்காளிகள்

வழ. இல: காணி / 4805
எதிர்
1. (அ) சின்னத்தம்பி பகீரதன்
(ஆ) சின்னத்தம்பி மகள் விசாலாட்சி
(இ) சின்னத்தம்பி மகள் ஆனந்தகுமாரி
எல்லோரும், பலாலி வீதி, கொக்குவில்
2. துரையப்பா துரைரத்தினம்
பலாலி வீதி, திருநெல்வேலி,
எதிராளிகள்.

திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலியைச் சேர்ந்த வழக்காளிகள் பின்னூற் காணும் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டிருக்கும் "வண்ணுத்தியைச் சுட்ட புலம்" நிலப் பரப்பு 155/8 என்னும் ஆதனம் சம்பந்தமாக மேற்சொல்லப்பட்ட வழக்கை இந்நீதிமன்றில் மேற்சொல்லப்பட்ட எதிராளிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்து உள்ளார் என்றும் இவ்வழக்கில் நீதிபதியால் 25-11-1983ல் இட்ட கட்டளையின் பிரகாரம், இவ்ஆதனம் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் வேறு யாரும் இருப்பின் அவர்களுக்கு, தமது உரிமையை, நிலைநாட்டுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் இவ்வறிவித்தல் தரப்படுகின்றது. இவ்வழக்கின் விடயப் பொருளில் அக்கறை உடையோர் யாரும் இருப்பின் 1984 ம் ஆண்டு மாசி மாதம் 5-ந் திகதி யாழ்ப்பாண மன்றில்தோன்றி அக்கறையைத் தெரிவிக்கலாம் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறித்த ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை "வண்ணுத்தியைச் சுட்ட புலம்" நில பர 155/8ம் இதற்குள் இருக்கும் கிணற்றுப் பங்கும் எல்லை கிழக்கு இராமலிங்கம் பெண் தங்கத்தின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு நல்லதம்பி பெண் அன்னமுத்துவின் ஆதனம். தெற்கு கார்த்திகேசு பெண் செல்லாச்சியின் ஆதனம், இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

பதிவாளர்
கு. குலசிங்கம்
19-1-84

தாபரித்தவர்:
க வைரவநாதன்
வழ / சட்டத்தரணி

274

# மனைவி மரணம்: கணவன் பிணையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

மனைவி மரணம் தொடர்பாக நீதிமன்றில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரான கணவர் ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

யாழ். நீதிமன்றத்தின் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் இவ்விசாரணை நடைபெற்றது.

மயக்க நிலையில் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புலேந்திரராணி என்பவர் இரு தினங்களுக்குப் பின் மரணமானதைத் தொடர்ந்து அவரது கணவர் பஞ்சராசா சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம், சட்டத்தரணி ரி லிங்கராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார். பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதரன் ஆஜரானார்.

விசாரணைமுடிவில் நீதவான் சந்தேகநபரை ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்லுமாறும், தவணை போடவில்லையென்றும், அறிவித்தல் வந்தால் நீதிமன்றம் வருமாறும் தெரிவித்தார்.

மற்றும் சந்தேகநபர்களையும் வரத் தேவையில்லையென்றும், அறிவித்தல்வந்தால் வருமாறும் நீதவான் தெரிவித்தார். [க]

## யாழ் தபாலகத்தில் 14ம் திகதி பென்ஷன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரிய தபால் கந்தோரில் இம்மாதம் 14ம் திகதி பென்ஷன் வழங்கப்படும். வழக்கமாக ஒவ்வொரு மாதமும் 15ம் திகதி வழங்கப்பட்டு வந்த பென்ஷன் இம்முறை யாழ். தபால் கந்தோரில் மாத்திரம் 14ம் திகதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [க]

## இப்படியும் நடக்கிறது

ஐந்தாம் வகுப்பில் கல்விபெறும் ஓர் சிறுவன், வகுப்பு நேரத்தில் குழப்பம் செய்தான். வகுப்பாசிரியர் அல்லது ஆசிரியை என்ன தண்டனை விதிக்கலாம்?

"பாவம். சின்னஞ் சிறுசுகள் அடிமட்டத்தால் அடிக்கவும் கூடாது. தலையில் குட்டவும் கூடாது. ஏன்... இன்னும் கூடாது......" என்று நீங்கள் முணுமுணுப்பது காதில் விழுகிறது. ஆனால்...

அது ஒரு பெரிய பாடசாலை. ஐந்தாம் வகுப்பு பிள்ளை குழப்பம் செய்தால் அந்த வகுப்பு ஆசிரியை என்ன செய்வார் தெரியுமா?

மதிய போசன இடைவேளை நேரம் பார்த்து ஓர் அறையில் (அது வகுப்பறையாகவும் இருக்கலாம்) அந்தப் பிள்ளையை வைத்து பூட்டி விடுவாராம்!

பின்னர் என்ன நடக்கும்?

அந்தப் பிஞ்சு மதிய உணவு இல்லாமல் வாடி வதங்கி பாடசாலை முடிந்ததும் வீடு செல்ல வேண்டியது தான்!

எப்படி இருக்கிறது தண்டனை?

—ஊடுருவி

## மரண அறிவித்தல்

### பொன்னம்மா பொன்னம்பலம்

திருமதி பொன்னம்மா பொன்னம்பலம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புத் தாயாரும், இளைப்பாறிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஜெயசிங்கின் மாமியாரும், பிறேமாவதி, மகேந்திரன், நித்தியவதி, நித்தியானந்தன் ஜெயசீலன் றேணுகாவதியின் அன்பு பேத்தியாரும் கீத்தா, சிறீ, சிவா, நகு, ஆனந்தா ஆகியோரின் அன்பு பூட்டியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு தகனக் கிரியைகளுக்காகச் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: சி. ஜெயசிங்
18, செட்டித் தெரு, நல்லூர்.

(601)

## ஆறு இராணுவ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து இச் சந்தேக நபர்களை ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார்

இவர்களுக்குப் பிணையாளியாக ஐ எம். எஸ். டீன் நின்றார்.

வழக்கிற்கு அழைக்கப்படும் போது இவர்களை உரியநேரத்தில் ஆஜர்செய்யவேண்டுமென்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்களின் சார்பில் இராணுவகேர்ணல் அமீன் புகாரியின் அனுசரணையுடன் சட்டத்தரணி கோசல விஜயவர்த்தன, சட்டத்தரணி ரஞ்சித் டி சில்வா ஆகியோர் ஆஜராகினர். [வெ]

## மரண அறிவித்தல்

### பன்னாலை பண்டிதர் பிரம்மஸ்ரீ ப. இரத்தினக் குருக்கள்

பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தான ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ ப. இரத்தினக் குருக்கள் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற அம்பிகா தேவியின் அன்புக் கணவரும், கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய ஆசிரியர் சபாரத்தினக் குருக்களின் தந்தையாரும், ஞானேஸ்வரியின் மாமனாரும், லலிதா கணேஷானந்தன் ஆகியோரின் பேரனுமாவர் அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை நண்பகல் 12மணிக்கு கேணிப்பிட்டி மயானத்திற்கு ஈமக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: இ. சபாரத்தினக் குருக்கள்.
619

## துப்பாக்கிச் சூடு..-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் சைக்கிளில் சென்று விட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

நெஞ்சில் ஒருசூடு விழுந்திருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த திரு. செல்வமாணிக்கம், ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் அமைப்பாளர் என்று தெரிவிக்கப்பட்டது.

### பிந்திய செய்தி

நேற்றிரவு மட்டக்களப்பு ஆஸ்பத்திரி வட்டாரங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, திரு. செல்வமாணிக்கத்துக்கு உடனடியாக நடைபெற்ற சத்திரசிகிச்சையின் பின்னர் அவர் ஆபத்தான கட்டத்தை கடந்துவிட்டதாகத் தெரியவருகிறது

## மீனுக்கு டைனமைட் இளைஞரின் கண்கள், கைகளை பதம் பார்த்தது!

(யாழ்ப்பாணம்)

மீனுக்கு டைனமைட் வைத்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் கண்களும், கைகளும் இழந்தநிலையில் பலத்த காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பண்ணையில் நேற்றுமுன்தினம் பற்றைக்குள் நின்று டைனமைட்டை கொளுத்தி எறியமுன்பு அது வெடித்ததால் இவ்விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

22 வயதான சிவச்சந்திரன் இவ்விபத்தில் பலத்த காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (க)

## துக்கதினமாக அனுஷ்டிக்க 'குமார்' கோரிக்கை

(கொழும்பு)

"தமிழ் தேசிய இனத்தின் இறைமை பறிக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்ட இன்றைய தினத்தைத் தமிழ்பேசும் மக்கள் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு வேண்டுகிறேன்" என்று தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"தமிழ் தேசிய இனம் அரசியல் சுதந்திரம் அற்றவர்களாக ஆக்கப்பட்ட தினமே, சுதந்திர தினமாகும்.

1948-ம் ஆண்டு இலங்கை பெற்ற சுதந்திரம் சிங்கள மக்கள்பெற்றசுதந்திரமே அன்றித் தமிழ் மக்கள் பெற்ற சுதந்திரமல்ல இழந்த தமது தன்னுரிக்கத்தை மீண்டும் பெறத்துடிக்கும் தமிழ் தேசிய இனம் இலங்கையில் இதுவரை நடைபெற்ற எந்தவொரு சுதந்திர தினக் கொண்டாட்டங்களிலும் பங்கு கொள்ளவில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சூ)

## மரண அறிவித்தல்

### S. A. கந்தசாமி

பருத்தித்துறையை பிறப்பிடமாகக் கொண்டவரும் திருகோணமலை இ போ ச. பஸ்காப்பாளரும் திரைப்பட நடிகரும் ஆகிய S. A. கந்தசாமி 1-2 84-ல் அகாலமரணம் அடைந்து விட்டார். இவர் ஆழ்வார் சேதுவின் அன்பு மகனும், தவமணி, சித்திரம் ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னப்பு (கட்டிட ஒப்பந்தக்காரர்), நாகம்மாவின் மருமகனும், ரவீந்திரன் (மகாஜனக் கல்லூரி), பார்த்தீபன், மதி, ரதி பகிராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நவமணி, சற்குணநாதன், தேவ மங்களநாதன் பேபி ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரரும், குகனேசராஜா (சிறீலங்கா கடற்படை திருகோணமலை), காலஞ்சென்ற செல்லத்துரை (இளைப்பாறிய ஒவசியர்), சின்னத்தம்பி (இளைப்பாறிய அதிபர்), பேரின்பநாயகம் (ஒவசியர் குருநாகல்), செல்வநாயகம் (சீமெந்து தொழிற்சாலை), குலநாயகம், நைல்ஸ் (வீடமைப்பு வெள்ளவத்தை), காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் சிவ பிரான்சிஸ் S துரை (அதிபர் த. க. பாடசாலை பூநகரி) யோகராசா (வைத்திய அதிகாரி) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார். இவரது பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று சனிக்கிழமை (4-2-84) காலை பத்து மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து உடுவில் பூவடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இராமலிங்கம் வீதி.
உடுவில் சுன்னாகம்.

614

## கோண்டாவில் ராணுவ தாக்குதல் வழக்கு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இராணுவத் தாக்குதல் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ், நாகராசா முன்னிலையில் எடுக்கப்பட்டது

இவ்வழக்கில் 79 ஜூன் 2ம் தேதி கோண்டாவிலில் ரயிலில் செல்லும்போது முகதீன் என்பவரைத்தாக்கியதாக இராணுவத்தைச் சேர்ந்த சந்திரசிறி புஞ்சிபண்டா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது

விசாரணை மார்ச் 23-ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது. (க)

## "பாடசாலை அபிமானமே மொழி, இன தேச அபிமானங்களாகின்றன"

(நல்லூர்)

"சிறுபராயத்தில் ஏற்படும் பாடசாலை அபிமானம்தான் பின்னர் இன அபிமானமாக மொழி அபிமானமாக, தேசாபிமானமாக சர்வதேச அபிமானமாக மலர்வதைக் காண்கிறோம். ஆரோக்கியமான இவ்வுணர்வுகள் சிறுவர்களின் உள்ளங்களிற் துளிர்விட பாடசாலை வார செயற்பாடுகள் உதவவேண்டும்"

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் பாடசாலை வார நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மகாவித்தியாலய அதிபர் திரு. கே. நடராசா மேற்கண்டவாறு கூறினர்.

பாடசாலை வாரக்கொண்டாட்டங்களின் போது சிரமதானம்மூலம் பாடசாலைக்கட்டிடங்கள் தளபாடங்களைத் திருத்தம் செய்யும் போது அவையெல்லாம் தமது உடைமைகள் தமக்குப் பின்னர் பல சந்ததியினருக்குப் பயன்படவேண்டும் என்ற உணர்வு கிளரும் அதனாலே பாடசாலைக்கு மதிப்பளிக்கும் நிலை உருவாகும்" என்று அதிபர் கே. நடராசா மேலும் கூறினர்,

## சுதந்திரதின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் இன்று காலை சுதந்திரதின விழா கொண்டாடப்படவிருக்கிறது.

காலை 8-15 மணிக்கு விருந்தினர்கள் எல்லோரும் கச்சேரிக்கு வருவார்கள்.

காலை 8-30 மணிக்கு தேசிய கீதத்துடன் தேசிய கொடி ஏற்றிவைக்கப்படும்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல அரசாங்க கட்டிடங்களிலும், தேசியக்கொடி ஏற்றிவைக்குமாறும், சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் தலைமைப் பீடத்திலிருந்து அறிவிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

## பெயர்கள்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குப்படி சர்வகட்சி மகாநாட்டுச் செயலகம் அறிவித்திருந்தும், இதுவரை தமிழர் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி பெயர்ப்பட்டியலை நேற்றுவரை அனுப்பி வைக்கவில்லை. [இ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number R 100236/81. Eelanadu- P. O. Box 49, Telephone: 22389 — 24126.